**தெற்காசியா துணை பிராந்திய பொருளாதார ஒத்துழைப்பு துறைமுக நுழைவினை மேன்மையுறச்செய்த நெடுஞ்சாலை செயற்திட்டத்தின் கீழ் பணிமனை கட்டிட வளாக நிர்மாண செயற்திட்டம் - 2024**

தெற்காசியா துணை பிராந்திய பொருளாதார ஒத்துழைப்பு துறைமுக நுழைவினை மேன்மையுறச்செய்த நெடுஞ்சாலை செயற்திட்டத்தின் கீழ் பணிமனை கட்டிட வளாக நிர்மாண செயற்திட்டத்தின் 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் இடையே கைச்சாத்திடப்பட்ட 2019 சனவரி 17 ஆம் திகதிய 3716-எஸ்ஆர்ஜ (எஸ்எவ்) ஆம் இலக்க செயற்திட்ட கடன் உடன்படிக்கையின் II ஆம் உறுப்புரை 2.09(அ) பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

செயற்திட்டத்தின் கடன் உடன்படிக்கை மற்றும் செயற்திட்ட நிர்வாக கையேடு என்பவற்றின் பிரகாரம் துறைமுகங்கள், கப்பற்துறை மற்றும் விமானசேவைகள் அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை அமுலாக்கல் முகவராக உள்ளது.

கோபுரங்கள் மூலம் இயங்கும் துறைமுக அணுகல் செயற்திட்டத்தின் நிர்மாணப் பணிகளை இலகுபடுத்தும் நோக்கத்தில் இலங்கை துறைமுக அதிகார சபையின் தற்போதைய அலுவலகக் கட்டிடத்தை வேறு இடத்திற்கு மாற்ற வேண்டிய அவசியம் மற்றும் கடன் உடன்படிக்கையின் செயற்திட்ட நிர்வாக கையேட்டின் பிரகாரம் தேசிய துறைமுகத்தின் பிரதான திட்டத்திற்கிணங்க துறைமுக வசதிகளை அபிவிருத்தி செய்வதற்கு தயார்படுத்துவதற்கு இலங்கை துறைமுக அதிகார சபைக்கு ஆதரவளித்தல் என்பன செயற்திட்டத்தின் நோக்கங்களாகும்.

கடன் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 1,090.08 மில்லியனிற்குச் சமமான ஐ.அ.டொலர் 6.11 மில்லியனாக உள்ளதுடன் செயற்திட்டத்தின் மொத்தக் கிரயமும் ஆசிய அபிவிருத்தி வங்கியால் நிதியளிக்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது.

செயற்திட்டத்தின் பணிகள் 2021 செப்டெம்பர் 09 இல் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் 2022 யூன் 09 இல் பூர்த்தி செய்யப்படுவதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. எனினும் செயற்திட்ட நடவடிக்கைகளின் பூர்த்திசெய்தல் திகதி 2023 திசெம்பர் 15 வரை நீட்டிக்கப்பட்டிருந்தது.

## 1.3 அபிப்பிராயம்

செயற்திட்டத்தின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகின்றேன்.

**1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

**1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்**

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும்

நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

**2. பௌதீக செயலாற்றல்**

**2.1 ஒப்பந்த நிர்வாகம்**

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2024 திசெம்பர் 31 வரையிலான திரண்ட கடப்பாட்டுக் கட்டணங்கள் அண்ணளவாக ரூபா 8,969,014 ஆக இருந்ததுடன் கடன் தொகையின் பயன்படுத்தப்படாத மீதியிலிருந்து இந்தக் கட்டணங்கள் செலுத்தப்பட்டுள்ளமை செயற்திட்ட நிதியை குறிப்பிட்ட காலத்திற்குள் பயன்படுத்தத் தவறியதைக் குறிக்கிறது. | மொத்த கடப்பாட்டுக் கட்டணமான ஐ.அ.டொ 0.8 மில்லியன் ஏற்கனவே மொத்த கடன் தொகையான ஐ.அ.டொ 300 மில்லியனில் சேர்க்கப்பட்டுள்ளது.<br>SLPA இற்கு காட்டப்பட்டுள்ள (2024 திசெம்பர் 31 வரை) ரூபா 8.97 மில்லியன், ஏற்கனவே கணக்கிடப்பட்ட இந்த கட்டணங்களின் ஒரு பகுதி என்பதுடன் இது ஏற்கனவே கடன் தொகையிலேயே சேர்க்கப்பட்டுள்தால் இதற்குத் தனியாக பணம் செலுத்தத் தேவையில்லை. | கடன் நிதியத்தை ஆக்கபூர்வமாக பயன்படுத்தவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | இந்த செயற்திட்டம் 2021 செப்டம்பர் 09 இல் தொடங்கி, நீட்டிப்புகளுக்குப் பிறகு 2023 திசெம்பர் 15 அன்று நிறைவடைந்ததுடன் இது 2025 திசெம்பர் 15 அன்று முடிவடைகின்ற 730 நாட்கள் குறைபாட்டு அறிவிப்பு காலத்தைக் (DNP) கொண்டுள்ளது. FIDIC துணைப்பிரிவு 11.9 இன் பிரகாரம் DNP இற்குப் பிறகு 28 நாட்களுக்குள் செயல்திறன் சான்றிதழ் வழங்கப்பட வேண்டியதுடன், துணைப்பிரிவு 14.13 இன் பிரகாரம் ஒப்பந்ததாரர் இது பெறப்பட்டு 56 நாட்களுக்குள் இறுதி கட்டணச் சான்றிதழைச் சமர்ப்பிக்க வேண்டும். இருப்பினும், ADB கடனும் 2025 திசெம்பர் இல் முடிவடைவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. இதுபோன்ற சூழ்நிலையில், ஒப்பந்ததாரர் இறுதி கட்டணச் சான்றிதழைச் சமர்ப்பித்திருந்தாலும், தற்போது இலங்கை துறைமுக | பணிமனை கட்டிட செயற்திட்டம் தொடர்பான தகராறுகளைத் தீர்த்தலானது கடன் இறுதித் திகதிக்கு அப்பாலும் நீட்டிக்கப்படலாம் என்று வரிசை அமைச்சிற்கு மற்றும் ADB இற்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. | ADB இன் கடன் முடிவு திகதிக்கு முன்னர் அனைத்து கொடுப்பனவுகளையும் முடிப்பதற்கு செயல்திறன் சான்றிதழ் மற்றும் இறுதி கொடுப்பனவு சான்றிதழை சரியான நேரத்தில் வழங்குவதை உறுதி செய்து, பணம் செலுத்துவதில் தாமதங்கள் மற்றும் மேலதிக கொடுப்பனவுகளைத் தவிர்க்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| அதிகாரசபையால் (SLPA) மீளாய்வு செய்யப்படுகின்ற தீர்க்கப்படாத கோரிக்கைகள் மற்றும் மாறுபாட்டுக் கட்டளைகள் என்பன காணப்பட்டன. ஒப்பந்ததாரர் பிணக்குகள் தீர்ப்பனவு சபையின் (DAB) கீழ் நடவடிக்கைகளைத் தொடங்குவதற்கான தனது விருப்பத்தைக் குறிப்பிட்டிருந்ததால், இந்தக் கொடுப்பனவுகளுக்கான பணம் கடன் காலத்திற்குள் செலுத்தப்படுமா என்பது குறித்து கணக்காய்வின்போது சர்ச்சைக்குரியதாக இருந்தது. | | |

## 2.2 களப் பரிசோதனைகளின் போது மேற்கொள்ளப்பட்ட அவதானிப்புக்கள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|
| செயற்திட்டத்தின் செயற்பாடுகள் 2023 திசெம்பர் 15 இல் கணிசமானளவு நிறைவடைந்திருந்தாலும், கணக்காய்வுத் திகதியான 2025 மே 09 இல் பணிமனை கட்டிட வசதிகள் முழுமையாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. இது செயற்திட்டத்தை செயல்படுத்துவதற்கும் அதன் நோக்கம் கொண்ட பயன்பாட்டிற்கும் இடையிலான இடைவெளியைக் குறிக்கிறது. | செயற்பாட்டு சிக்கல்கள் மற்றும் இடிக்கப்படுவதற்காக காத்திருக்கும் நான்கு பழைய பணிமனை கட்டிடங்களின் தொடர்ச்சியான பயன்பாடு என்பன காரணமாக முழுமையான பயன்பாடு தாமதமாகியுள்ளது, மூன்று முழுமையாக செயற்பாட்டில் உள்ளதுடன் அதே நேரத்தில் ஒன்று குறைவாக பயன்படுத்தப்படுகிறது: | செயற்திட்டத்தின் நோக்கங்களை அடைவதற்கு பணிமனை வசதிகளின் செயற்பாட்டை விரைவுபடுத்துதல் வேண்டும். |